# The Neithal Land from Agananooru – The Community of Barathavas at Alaivaaikarai from The Novel

**Dr. J. Benny**
*Assistant Professor, Tamil Research Centre*
*S.T. Hindu College, Nagercoil*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346679

**Abstract**

*The ancient Tamils built their way of life based on the characteristics of the land they inhabited. Among the five landscapes (Tinai), Neithal Tinai represents the seashore region, and the lifestyle of the fisherfolk (Parathavar) living in this coastal environment is beautifully portrayed both in the Sangam classic Akananuru and in the modern novel Alaivaykkaiyil. During the Sangam age, the fisherfolk lived in small huts built on sandy shores. In contrast, the novel Alaivaykkaiyil shows that today's fisherfolk live in well-built houses according to their improved economic status. Their primary food continues to be fish-based dishes. Although fishing remains their main occupation, they now use technologically advanced fishing equipment. The beliefs in divine powers and spirits that existed in the ancient community are still found among the present-day fisherfolk. In the past, the groom's family offered gifts (seer) to the bride's family during marriage, but Alaivaykkaiyil reflects how this custom has reversed — now, the bride's family provides the dowry.*

***Keywords:*** *Akananuru, Alaivaykkaiyil, Fisherfolk Community, Manam (Marriage), Thoovi (Ritual), Custom*

**References**

1. Appadurai, Kashi. Tamilagam before 1800 Years, Maamaya Publications, Chennai, 2006.
2. Andhrisha, M. K. M. The Life and Culture of the Paliyar Tribe in the Works of Kodhandam, International Tamil and Literary Journal, January 2023.
3. Imayam Krishnan. Alaivaykkaiyil, Thagam Publications, Chennai, 1990.
4. Seibal, Ima. Akananuru, New Century Book House, Chennai, 2007.
5. Tamilannal. Tolkappiyam – Porul Adhikaram, Meenakshi Book Centre, Madurai, 2010.
6. Bhaktavatsala Bharathi. Cultural Anthropology, Meyyappan Publications, Chidambaram, 2016

# அகநானூற்று நெய்தல்திணை – அலை வாய்க்கரையில் நாவல் காட்டும் பரதவர் சமூகம்

***முனைவர் ஜோ. பென்னி***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

***ஆய்வுச்சுருக்கம்***
*பண்டைய தமிழர்கள் நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். ஐந்திணைகளில் கடல் சார்ந்த நிலமான நெய்தல் திணையில் வாழும் பரதவர் இன வாழ்வியலை சங்க அகநூலான அகநானூறும், தற்கால இலக்கிய நூலான அலைவாய்க்கரையில் நாவலும் மிக அழகாகக் காட்சிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் மணற்பரப்புகளில் சிறு குடிசை கட்டி வாழ்ந்த பரதவர்கள் தற்போது தங்கள் பொருளாதார வசதிக்கேற்ப மச்சு கட்டிய வீடுகளில் வாழ்வதை அலைவாய்க்கரையில் நாவல் சுட்டிக்காட்டுகிறது. இவர்களது முக்கிய உணவாக அமைவது மீன் உணவுகளே ஆகும். முதன்மை தொழிலாக மீன்பிடித் தொழில் அமைந்தாலும் தற்காலத்தில் தொழில்நுட்ப மிக்க மீன்பிடிக் கருவிகளை பரதவர்கள் பயன்படுத்துகின்றனர். ஆதிச் சமூகத்தில் இருந்த தெய்வ நம்பிக்கையும், பேய் குறித்த நம்பிக்கையும் இக்கால பரதவர் இனத்தாரிடமும் காணப்படுகிறது. ஆண் மணப்பெண்ணின் குடும்பத்தாருக்கு சீர் கொடுத்து பெண் கொள்ளும் அக்கால மரபு மாற்றம் கொண்டு, இன்று பெண் வீட்டினரே சீதனம் கொடுக்கும் வழக்கம் இருப்பதை அலை வாய்க்கரையில் நாவல் மூலம் அறிய முடிகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *அகநானூறு, அலைவாய்க்கரையில், பரதவர் சமூகம், ஆணம், தூவி, நியமம்*

## முன்னுரை

மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் காலமாற்றத்திற்கேற்ப அந்தந்த காலச்சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு பிறக்கின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கை நிலைகளை, வாழ்க்கைச் சிந்தனையின் வளர்நிலைகளை அறிவதற்கு கருவியாக உள்ளவை அக்கால அக இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்களை திணை இலக்கியங்கள் எனவும் கூறுவதுண்டு. ஐந்திணைகளில் ஒன்றான நெய்தல் திணை கடல் சார்ந்த பரதவ இனச்சமூகத்தின் வாழ்வியலை முன்னிறுத்துகிறது. அக இலக்கியங்களில் ஒன்றான அகநானூறு இச்சமூக மக்களின் பண்பாட்டு மரபுகளை முழுமையாக காட்சிப்படுத்துகிறது. இத்தகைய இலக்கியங்களை அடித்தளமாகக் கொண்டு இன்று வரையிலும் பல இலக்கிய வகைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. சமகால இலக்கிய வடிவங்களில் ஒன்றான நாவல் இலக்கியம் குறிப்பிட்ட இனம் சார்ந்த மக்களின் வாழ்வியலைப் பேசுவதில் முன்நிற்கின்றன. அந்த வகையில் இராஜம்கிருஷ்ணன் அவர்களின் "அலைவாய்க் கரையில்' நாவல் இன்றைய பரதவ இனச் சமூகத்தின் வாழ்வியல் சிக்கல்களை எடுத்துரைப்பதாக அமைகிறது. ஒரு குறிப்பிட்ட இனக் குழுச்சமூகத்தின் முந்தைய பிந்தைய வாழ்வியலை, வாழ்வியல் மாற்றங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் நோக்கில் பரதவ இனக்குழுச்சமூகத்தை களமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**அகநானூற்று நெய்தல் சமூகம்**

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு தனியொரு இனக்குழுச் சமுதாயமாக வாழத் தொடங்கினான். அது வேதிணைச் சமூக வாழ்வியலாக மாற்றம் கொண்டது. வாழ்வதற்குரிய இடமாகிய நிலப் பரப்பை மலை, காடு, வயல், கடற்கரை, பாலை என ஐந்து வகையாகப் பாகுபடுத்திய தமிழர்கள் அதற்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று பெயரிட்டனர். இத்தகைய நிலப்பரப்பினை தொல்காப்பியர்,

**மாயோன் மேயகாடுறை உலகமும்**
**சேயோன்மேயமை வரை உலகமும்**
**வேந்தன்மேய தீம்புனல் உலகமும்**
**வருணன்மேய பெருமணல் உலகமும்**
**முல்லைக் குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும்படுமே**
**(தொல்.பொருள். 5)**

என்னும் நூற்பாவினால் சுட்டிக் காட்டுகிறார். அதுமட்டுமன்று நெய்தல் நிலத்தை முதலில் "பெருமணல் உலகம்' என்றே கூறியுள்ளார். பின்னர் அப்பெருமணற்பரப்பில் பூக்கும் பூவினைக் கொண்டு "நெய்தல்' என்று அறிமுகப்படுகின்றார்.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த சங்ககால மக்களின் வாழ்வும், வரலாறும், அவர்களைச் சுற்றி அமைந்த சூழலும் அகநானூற்றின் பாடு பொருட்களாக உள்ளன. கடற்கரையில் வாழ்ந்து மீன் பிடித்தொழிலையும், கடல் வாணிகத்தையும் மேற்கொண்ட இம்மக்கள் பரதவர், வலைஞர், திமிலோன், நுளையர், சேர்ப்பன், வேட்டுவர், பரவன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். இம்மக்கள் தமிழகத்தின் தொல் குடியினர் என்பதை,

**சிறுபல் தொல் குடிப்பரு நீர் சேர்ப்பன்**
**(அகம் 290)**

என்னும் அகநானூற்று வரிசுட்டுகிறது. தமிழகத்தில் வாழ்ந்த மிகப் பழங்குடியினர் வில்லவர் மற்றும் மீனவர்கள். வில்லவர் அல்லது வில்லாளிகள் மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் வாழ்ந்து வேட்டையால் வாழ்க்கை நடத்தினார்கள். மீனவர் அல்லது செம்படவர் ஆற்றுத் தீரங்கள் தாழ் வெளிகள் கடற்கரை ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். இவ்விருகிளையினத்த வரும் இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒரு முற்பட்ட காலமனித இனத்தவர் (1800 ஆண்டு கட்கு முற்பட்ட தமிழகம், பக்.57) என்று பன்னெடுங்காலத்திற்கு முன்பே இந்தியாவில் வாழ்ந்த தொன்மை மரபினரான மீனவர் பற்றி குறிப்பிடுகின்றார்கா. அப்பாத்துரை அவர்கள்.

**அலை வாய்க்கரையில் நாவலும் பரதவர் சமூகமும்**

கத்தோலிக்க பரதவ இன மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுத்தாளுமை மிக்க பெண் நாவலாசிரியர் இராஜம்கிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது அலைவாய்க் கரையில் நாவல். இராஜம் கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்ட இனக்குழுக்களை முன்வைத்து பல நாவல்களை எழுதியுள்ளார். கள ஆய்வின் மூலம் தான் கண்ட அனுபவங்களை கதைகளாக்குவது இவரது தனிச் சிறப்பாகும். அத்தகைய கள ஆய்வின் மூலம் படைக்கப்படும் நாவல்களின் வாயிலாக நிகழ்காலச் சமூக அவலங்களையும், சிக்கல்களையும் வெளிஉலகிற்கு எடுத்துக்காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இவரது நோக்கமாகும். அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கன்னிகாபுரம் என்னும் கடற்கரை கிராமத்தை கதை நிகழும் களமாகக் கொண்டு அலை வாய்க்கரையில் நாவல் படைக்கப்பட்டாலும் அதனை சுற்றியுள்ள அமலிநகர், மணப்பாடு, உவரி, புன்னைக் காயல், ஆலந்தலை, இடிந்தகரை போன்ற பல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மீனவர் வாழ்க்கை முறையை நேரில் கண்டு அந்த அனுபவங்களையும் கொண்டே இந்நாவலை உருவாக்கியிருக்கிறார்.

தூவிக்குத்தகை எதிர்ப்புப் போராட்டம் அதன் காரணமாக ஏற்பட்ட மத மாற்றம், விசைப்படகு எதிர்ப்பு ஆகிய நிகழ்வுகளே இந்நாவலின் கதைக்கருவாகும்.

கன்னிகாபுரம் கடற்கரை கிராமத்தில் பழமைப் பற்றுடனும், சமயப்பற்றுடனும் வாழும் இருதயராஜின் மகன் மரியான். மீனவர்களுக்கு ஆயிரக்கணக்கான பணத்தைக் கொடுக்கும் மீனின் தூவியும், மீன்பாட்டின் ஒரு பகுதியும் கோயிலுக்கு இனாம் என்றும், வட்டக்காசு என்றும் சுரண்டப்படுவதை உணர்ந்து கொண்ட அவ்வூர்மக்கள் அதனை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்த போராட்டத்தில் முன்னணியில் நிற்கிறான் மரியான். அதன் காரணமாக அவனும், போராட்டத்தில் ஈடுபட்ட மற்றவர்களும் பாதிரியாரால் கோவிலில் இருந்து விலக்கப்படுகிறார்கள். இதனால் ஊரில் பதற்றம் நிலவ, அமைதியை ஏற்படுத்த வந்த காவல்துறை பாதிரியாரின் அடியாட்களாக மாறுகிறது. காவல் துறையின் அடக்கு முறையால் மரியானும் மற்ற இளைஞர்களும் தலைமறைவாகியதால் ஊரில் நடப்பதை அறிய முடியாமல் குழம்பி நிற்கின்றனர். அவனது தந்தையும் சிலரும் பாதிரியார் இல்லத்தில் சிறை வைக்கப்பட்டு காவல் துறையால் துன்புறுத்தப்படுகின்றனர். மரியானின் தந்தை தப்பிச் செல்வதற்கு உதவி செய்ததால் அவனது காதலி ஏலி போலிசாரால் கொடுமைகளுக்கு உள்ளாகி இறக்கிறாள்.

தூவிக்குத்தகை எதிர்ப்புப் போராட்டத்தில் மரியானுக்கு உறுதுணையாக நின்ற பிச்சமுத்துப் பாட்டா கொலை செய்யப்படுகிறார். கோவில் நிர்வாகத்தின் பிடியிலிருந்து விடுபட இம் மீனவர்கள் கிறித்தவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறி தூவிக் குத்தகையிலிருந்து விடுதலையடைகின்றனர். ஆனால் இத்துடன் இவர்களது வாழ்க்கைப் போராட்டம் முடிவுக்கு வரவில்லை. அடுத்ததாக விசைப்படகு பிரச்சனைப் பல பரதவர்களைப் பாதிக்கின்றது. மரியானின் தம்பி உட்பட பல இளைஞர்கள் விசைப்படகுகளை எதிர்த்து வன்முறையில் ஈடுபடுகின்றனர். இதனால் அழகிய கடற்கரைக் கிராமம் கொலைக்களமாக மாறுகிறது. ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும் கடலலைகளைப் போல் தொடர்ந்து கொண்டிருக்கும் பரதவர் சமூகத்தின் போராட்ட நிலையை இந்நாவல் எடுத்துக்காட்டுகிறது.

### வாழிடம்

சங்க காலம் முதல் நவீன காலம் வரையிலான கால மாற்றத்திலும் மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளில் ஒன்றான இருப்பிடத்தை தாம் வாழும் நிலத்தின் தட்ப வெட்ப நிலைக்கு ஏற்பவும், பொருளாதாரத்திற்கு ஏற்பவுமே அமைத்துக் கொண்டுள்ளனர். சங்ககாலத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கிய, ஏழ்மை நிலையிலிருந்த மக்கள் மணற் பரப்பில் தங்களுக்கென சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்ததாக அகநானூறு குறிப்பிடுகிறது.

**நிலாவின் இலங்கு மணல் மலிமறுகில்**
**புலால்அம் சேரிபுல்வேய் குரம்பை**
**(அகம். 200)**
**குறையிறைக்கு ரம்பைக் கொலை வெம்பரதவர்**
**(அகம். 210)**

ஆகிய அகப்பாடல் வரிகள் மணல் நிறைந்த புலால் நாற்ற மடிக்கும் தெருக்களில் புல்லாலும் பனை மட்டையாலும் வேயப்பட்ட குடிசைகளிலும், குறுகிய இடத்தையுடைய சிறிய குடிசைகளிலும் பரதவர்கள் வாழ்ந்ததாக தெரிவிக்கிறது.

அலை வாய்க்கரையில் நாவலில் சுட்டப்படும் பரதவ இனத்தில் பொருளாதாரத்தில் ஓரளவிற்கு மேம்பட்ட மற்றும் பின் தங்கிய இருதரப்பு வீடுகள் காட்டப்பட்டுள்ளன. கட்டுமர உரிமையாளனாக சித்தரிக்கப்படும் நசரேன் பொருளாதாரத்தில்

சற்று மேம்பட்டவனாக இருக்கிறான். அவனது வீடு ஓடு வேய்ந்து, உள்ளே மச்சு கட்டியவீடு. விசாலமான நடுக்கூடமும் பின்னால் குசினிப் பகுதியும் புறக்கடையும் உள்ள பெரிய வீடாகவும் தெருவைப் பார்த்து அமைக்கப்பட்ட வாயிலுடனும் காட்சியளித்தது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பரதவரின் வீடுகள் சிறிய ஓலைக்கூரையாலான தாழ்வாரத்தைக் கொண்டதாகவும், சுமாரான நடுக்கூடத்தைக் கொண்டதாகவும் இருந்தது. பின்னால் ஒரு ஓரமாக அமைந்த ஓலைகளால் வேயப்பட்ட புறக்கடையில் உரல், குந்தானி, அடக்காவிக் கட்டை மற்றும் கிழிந்த வலைகளின் குவியலுமாக காட்சியளித்தது. இவ்வாறு இருவகையான வீட்டமைப்புகள் நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## உணவு

கடற்கரை சார்ந்த நெய்தல் நில மக்களின் முக்கிய உணவாக அன்றும் இன்றும் மீன் உணவுகளே இருக்கின்றன. "இனக்குழு மக்களின் உணவுமுறை முற்றிலும் அவர்கள் வாழும் நிலத்தோடு தொடர்புடையதாகும்" (ம. ஆன்றிஷா, பக்.33). சங்ககால நெய்தல் நிலச் சமூகத்தில் மக்கள் வெண் நெல்லால் ஆக்கப்பட்ட சோற்றுடன், புளிக்கரைத்து மீன்துண்டோடு சேர்த்து ஆக்கிய குழம்பை கொழு மீன்கருவாட்டுடன் உண்டதை,

> **உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
> **அயிலைதுழந்த அம்புளிச்சொரிந்து**
> **கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்**
> **(அகம் 60)**

என அகநானூறு விவரிக்கிறது.

அலைவாய்க் கரையில் நாவலும் பரதவர்கள் மீனையே தங்களது முதன்மை உணவாக உட்கொண்டதை சுட்டிக் காட்டுகிறது. சுறா, காரல்மீன், கெளுத, சாள, சிங்கிறாள், கல்றாள், வாளை, வஞ்சிரம், ஓங்கல், கூரல்மீன், கோமரயன், தளைமீன், சீலாமீன், அயிலை, களர், நகரை, கிளிமீன், கிச்சாமீன், குரங்குமீன், சப்பிளிமீன், பன்னாகத்தாழை, பல்கிளஞ்சான் மீன் என பலவகையான மீன்கள் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மீன் மட்டுமல்லாமல் புல்லரிசி, கேழ்வரகு, அரிக்கஞ்சி, ஆணம் என்ற குழம்பு, கருவாடு, பழம், சாராயம், உப்பு முதலிய பொருட்களையும் உணவாகப் பயன்படுத்திய செய்தி நாவலில் சொல்லப்பட்டுள்ளது. காரல விச்சிச்சாறெடுத்துத்தாரேண்டு உங்காத்தா சொல்லுதா. ஆனா அவக்கு பொளுதெங்க இருக்யு (அலை வாய்க்கரையில், பக். 23) என்ற வரிகள் இவர்கள் உணவையே மருந்தாகவும் பயன்படுத்துவதை உணர்த்துகிறது.

இந்நாவலில் சுட்டப்படும் ஆணம் என்னும் குழம்பு அகநானூற்று நெய்தல் திணையில் சுட்டப்படும் மீனோடு புளி சேர்த்து செய்யப்படுகின்ற குழம்பைச் சுட்டுவதாகவே கொள்ளலாம். ஆனால் தமிழகத்தின் தென்கோடியிலுள்ள குமரி மாவட்ட முக்குவர் இனச் சமூகத்தில் "ஆணம்" என்பது "கிழங்காணம்" என்று அழைக்கப்படுகிறது. இவ்வுணவு வேக வைத்த மரவள்ளிக்கிழங்கு, நெத்தலி அல்லது கூனிமீன், புளி, மஞ்சள், வத்தல், சீரகம், பூண்டு ஆகிய பொருட்களை சேர்த்து செய்யும் உணவாகும். இவ்வாறு பரதவ இனச் சமூகத்தின் உணவுமுறை என்பது பண்டைய நெய்தல் நில உணவு முறையின் பண்பாட்டு மரபு நீட்சியாகவே காணப்படுகிறது.

## தொழில்

மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யதான் வாழும் நிலத்திற்கேற்றவாறு தொழிலையும் நிர்ணயித்துக் கொண்டான். கடலை நம்பி வாழும் நெய்தல் சமூகம் மீன் பிடித்தலையே முதன்மையான தொழிலாகக் கொண்டுள்ளது. மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மக்கள்பல பிரச்சினைகளை சந்திக்க நேரிடுகிறது. மீன் பிடிக்கக் கொண்டு செல்லும் வலைகளை

சுறா மீன்கள் கிழித்து விடுவதுண்டு. கீழ்காற்றால் கடலில் அலைகள் எழுந்து படகையே உடைத்து விடுவதுண்டு. இத்தகைய சூழலிலும் மீன் பாடு இல்லையே என்று அத்தொழிலை விட்டுவிடுவதில்லை. உடைந்த படகையும் கிழிந்த வலையையும் சீரமைத்துக் மீண்டும் நம்பிக்கையுடன் கடலுக்குச் செல்வர்.

ஆழ்கடலில் சென்று மீன்களைப் பிடித்து வரும் பரதவர்கள் அதற்கென தனிப் படகுகளைப் பயன்படுத்தினர். அப்படகிலிருந்தபடியே பெரிய மீன்களை எறிந்து கொல்வதற்காக எறி உளியினை கைகளில் வைத்திருந்தனர். எறி உளியினால் தாக்கப்பட்ட மீன்கள் வானவில்லைப் போல தாவி மேலே எழுந்ததையும், காயம்பட்ட மீனிலிருந்து ஒழுகிய இரத்தம் கடலில் விழுந்து கடல் நீர் முழுவதும் இரத்தமாக மாறியதையும்,

**எறியுளி பொருத ஏமுறு பெருமீன்**
**புண்ணுமிழ் குருதி புலவுக் கடல்மறுப்பட**
**விசும் பணிவில்லிற்போகிப், பசும்பிசிர்த்**
**திரைபயில் அழுவம் உழக்கி, உரன் அழிந்து**
**நிரை திமில்மருங்கில் படர் தரும்**

**(அகம் 210)**

என்னும் அகநானூறு பாடல் சுட்டிக்காட்டுகிறது.

அலைவாய்க் கரையில் நாவலில் பரதவர் இனமக்கள் தங்களது முதன்மையான தொழிலாக மீன் பிடித்தொழிலையே செய்கின்றனர். உயிரைக் துச்சமாக எண்ணி அலைகளோடு போராடி வாழ்க்கை நடத்தும் மீனவர்களுக்கு நிலையான வருமானம் கிடைப்பதில்லை. எனினும் தங்கள் முன்னோர்களைப் போன்றே இன்று இல்லையென்றால் நாளைபாடு நடக்கும் என்ற எண்ணத்துடன் தொழிலில் ஈடுபடும் மக்களின் மனநிலையை, இன்னக்கிக் கடல் நாச்சி குடுக்கும். நாளைக்குப் பட்டினி போட்டாலும் போடும். அது நாளையப்பாடு. இதான் வேய்கடல் தொழிலாளிக்கு வரச்ச வரை (அலைவாய்க்கரையில், பக்.70) என்ற வரிகள் பறைசாற்றுகின்றன.

பரதவர்கள் மீன்பிடித் தொழிலுடன் சுறா மீன்களின் தூவிகளை விற்றும் வருமானம் ஈட்டுகின்றனர். இத்தூவிக்குத்தகைப் பிரச்சினையாலும், எந்திரப் படகின் வரவினாலும் இவர்களது தொழிலும், வாழ்க்கையும் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகியது. கட்டு மரத்திலும், வள்ளத்திலும் சென்று மீன் பிடிக்கும் இடங்களை விசைப்படகு காரர்கள் ஆக்கிரமிப்பதால் இவர்களது தொழிலும், வருமானமும் பாதிக்கப்படுவதை, கடல் தொழிலாளி வழக்கம் போல கடலுக்கும் போறான். குடிக்கிறான். இப்ப இறாலில் நல்ல காசுதா. ஆனா ஆறாயிரம் விசைப்படவுக இன்னும் வந்து எல்லாக் கரையிலும் இறால் புடிச்சிச்சின்னா மடிக்காரனுக்கும் வள்ளக்காரனுக்கும் என்ன இருக்கு (அலை வாய்க்கரையில், பக்.248) என்ற நாவலின் வரிகள் விளக்கிக்காட் டுகின்றன. இவ்வாறு பரதவர் சமூகத்தினரின் மீன் பிடித்தொழிலானது இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுவதை அகநானூற்றிலும், இயற்கை சீற்றத்தோடு சகமாந்தர்கள் செய்யும் அநீதியாலும் பாதிக்கப்படுவதை அலை வாய்க்கரையில் நாவலிலும் காணமுடிகிறது.

### நம்பிக்கைகள்

ஆதிகால மனிதன் மழை, வெயில், இடி, மின்னல் போன்ற இயற்கை நிகழ்வுகளின் மீது கொண்ட அச்சமே மனித வாழ்வில் நம்பிக்கை இடம் பெற காரணமாக அமைந்தது. இந்த நம்பிக்கைகள் எவ்வித விளக்கமும், காரணமுமின்றியே ஒவ்வொரு இனச் சமூகத்திலும் வழிவழியாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அகநானூறு காட்டும் பரதவ இனமக்கள் பௌர்ணமியன்று மீன்பிடிக்கச் செல்வதைத் தவிர்த்து, அன்றைய நாளில் மீனும் இறைச்சியும் படைத்து கடற்தெய்வமான வருணனை வழிபட்டுள்ளனர். இவ்வாறு செய்தால் மீன்வளம் பெருகும் என்ற நம்பிக்கை இவர்களிடத்தில் இருந்ததாகப் பட்டினப்பாலை விவரிக்கின்றது.

கடலில் சில வகை மீன்கள் அவற்றிற்குரிய பருவ காலங்களில் மட்டுமே கிடைக்கும். அவ்வாறு மீன் கிடைக்காத நாட்களில் மீண்டும் கிடைப்பதற்காக வேண்டி இளைஞர், முதியவர், ஆடவர், பெண்டிர் என அனைவருமே சுறாமீனின் கொம்பை நட்டுத் தெய்வமாக மதித்து ஆடிப்பாடி தொழுத செய்தியினை,

கடல்பாடு அழிய, இனமீன் முகந்து

**துணைபுணர் உவகையர் பரதமாக்கள்**
**இளையரும் முதியரும் கிளையுடன்துவன்றி**
**(அகம் 30)**

என்னும் அகநானூற்று வரிகள் புலப்படுத்துகின்றன. நெய்தல் நிலமக்கள் தெய்வத்தின் மீது நம்பிக்கை கொண்டது போலவே பேய்கள் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தனர். கண்ணுக்குப் புலப்படாத பேய்கள் உலாவுவதாகவும் நம்பினர். நெய்தல் நிலத் தலைவியின் தோற்றத்தில் மாற்றத்தைக் கண்ட மற்றவர் அவளுக்கு பேய் பிடித்திருக்குமோ என நம்பியதை அகநானூறு,

**கவ்வை நல்அணங்கு உற்ற, இவ்ஊர்,**
**கொடிது அறிபெண்டிர் சொற்கொண்டு அன்னை**
**(அகம் 20)**

எனும் பாடலால் விளக்குகிறது. மேலும் புள்நிமித்தம் பார்க்கும் நம்பிக்கையும் இவர்களிடத்தில் காணப்பட்டுள்ளது.

அலைவாய்க் கரையில் நாவலில் பரதவர்கள் கத்தோலிக்க சமய தெய்வங்கள் மீது அதீத நம்பிக்கை கொண்டுடிருந்தனர். இயேசுவின் தாயான மரியன்னையின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்ததையும் நாவல் சுட்டுகிறது. கன்னிகாபுரம் ஊரில் விசைப்படகின் வருகையினால் தொழில் பாதிக்கப்பட்டதால், மரியான் வேற்றூருக்குச் சென்று விசைப்படகில் மீன்பிடிக்க விரும்புகிறான். ஆனால் அவனது தாய் அவனை சொந்த ஊரைவிட்டுச் வெளியூர் சென்று மீன் பிடிக்ககூடாது என்று கூறியதோடு தன் மகனுக்காக மாதாவிடம் வேண்டியதை, "சுமாதாவே! உன் மக்கள் தோழ்சமெல்லாம் பொறுத்து மன்னாப்பு கண்டு வேணும். பிள்ளை எட்டி ஓதச்சாலும் காலை முத்தம் வைக்கும் ஆத்தாளே. கடலம்மஉம் புள்ளியள்ளாம் கவடு இல்லாத மக்க. உண்மையாம் படியே ஆரையும் உதாசீனம் செய்யமாட்டா. நல்லபடியாக காத்துக்கரை சேரும் தாயே (அலை வாய்க் கரையில், பக்.115) என்னும் வரிகள் உணாத்துகிறது.

ஆதிச்சமூகம் பேய் நம்பிக்கை கொண்டிருந்தது போலவே இம்மக்களிடத்தில் மந்திர நம்பிக்கையும் காணப்படுகிறது. சினிமா ஆசையால் ஊரை விட்டுச் சென்ற எட்வின் எல்லாவற்றையும் இழந்து பைத்தியக்காரனாய் ஊர் திரும்பியதும் அதை சரி செய்ய மந்திரவாத சிகிச்சைக்கு சென்றதை, வந்த புதிதில் பைத்தியக்காரனைப் போல் தான் கேட்டதற்கு எந்த பதிலும் சொல்லாமல் விழித்தான். பிறகு மாமி நேர்ச்சையெல்லாம் கொடுத்து தொள்ளாளியிடம் சென்று மந்திரதாயத்தையெல்லாம் கட்டி கொஞ்சம் செலவு செய்தாள். தேய்ந்து மெலிந்திருந்தவன் ஆத்தாளும் அக்காளும் அளித்த ஊட்டத்தில் உரம் பெற்றான் (அலை வாய்க்கரையில், பக்.42) என்ற நாவல் வரிகள் எடுத்தியம்புகின்றன. அவ்வாறே குடியினால் ஏற்படும் உடல் பாதிப்பிற்கும் செய்வினைக் கோளாறு தான் காரணம் என்று நம்பும் வழக்கமும் இவர்களிடம் உள்ளது. இவ்வாறு அகநானூற்று நெய்தல் சமூகத்தினரின் நம்பிக்கைகளின் மரபு நீட்சி அலைவாய்க்கரையில் நாவல் பரதவரிடம் காணபட்டாலும். கால மாற்றம் அவற்றில் சில வேறுபாடுகளை ஏற்படுத் திருப்பதையும் அறியமுடிகிறது.

**வாழ்வியல் சடங்குகள்**

மனிதனின் நம்பிக்கை வெளிப்பாட்டினால் நிகழ்பவையே சடங்கு முறைகளாகும். இவை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான ஒவ்வொரு சூழலிலும் நிகழ்கின்றன. அகநானூற்று நெய்தல் திணையில் திருமண

நிகழ்வு சார்ந்த சடங்குகளே விரிவாக சொல்லப்பட்டுள்ளன. "மனித இனம் தன்பால் உந்து தலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட முறையே திருமணம் என்பர்" (பண்பாட்டு மானிடவியல், பக்.379). மணநிலை சமுதாயத்தை உருவாக்கும் பெருநிலையாகும். மணமகன் மணமகளின் குடும்பத்தார்க்குக் குறிப்பிட்ட தொகை கொடுத்து பெண் கொள்ளும் மரபு அக்காலச் சமூகத்தில் காணப்பட்டது. தலைவியின் அணிகலன்களுக்கு ஈடாக "நியமம்" என்ற செல்வவளம் மிக்க ஊரையே தலைவன் கொடுத்தாலும் ஏற்கமாட்டார்கள் என்ற செய்தி அகநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கருங்கட் கோசர் நியமம் ஆயினும்,**
**"உறும்" எனக் கொள்குநர் அல்லர்**
**நறுநுதல் அரிவை பாசிழை விலையே**
**(அகம் 90)**

இப்பாடல் வழியாக நிலம் கொடுத்துப் பெண் கொள்ளும் மரபு சங்ககால பரதவர் சமூகத்தில் இருந்ததை அறிய முடிகிறது. அவ்வாறு விலை கொடுக்க முடியாத நிலையில் ஆண் பெண் வீட்டிற்குச் சென்று தங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்து ஈடு செய்வதும் மரபாக இருந்ததை அகநானூறு சுட்டிக் காட்டுகிறது.

அலைவாய்க் கரையில் நாவல் பரதவர் இனத்தில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகளாகப் பெயர் சூட்டுதல், திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு ஆகியவற்றை பதிவு செய்துள்ளது.

பரதவரின் திருமணச் சடங்கில் குடிமகன் தான் மாப்பிள்ளைக்கு முகச்சவரம் எடுப்பதிலிருந்து கோவிலுக்கு அழைத்துச் செல்லும் போது குடை சுருட்டி, குடை பாவாடை ஆகியவற்றை தூக்கிச் செல்வது வரை எல்லா நிகழ்வுகளிலும் முன்னிற்கிறான். திருமணத்திற்கு முந்தைய நாள் சடங்கான முகச்சவரத்தை முடித்தவுடன் குடிமகன் வரிசைப் பணத்துக்கு உரிமையானவனாகி விடுவான். இதனை, இசக்கி முத்து பலகாரம் உண்டு மோதிரம், முப்பது ரூபாய் பணமும் புதிய வேட்டியும் தலைச்சுற்றுமாகத் தன் குடிலுக்குத் திரும்புகிறான் (அலைவாய்க் கரையில், பக்.189) எனும் கூற்றால் அறியலாம். திருமணத்திற்காக பெண் வீட்டினரே ஆண்களுக்கு சீதனம் கொடுக்கும் வழக்கம் பரதவர் இனத்தில் உள்ளது. இவ்வாறு சங்க கால நெய்தல் சமூகத்திலும், இன்றைய பரதவ இனத்திலும் பலசடங்குகள் காணப்பட்டாலும் இன்றைய நிலையில் அதில் பல மாற்றங்களும் நிகழ்ந்தேறியிருக்கின்றன. எனினும் சங்க காலம் போன்றே இப்போதைய பரதவர் இனச்சமூகத்தில் பெண்ணிற்கான தாலி, புடவை முதலிய திருமண சீதனங்கள் யாவும் மணமகனே கொடுப்பது ஒப்புமைக் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

இலக்கியங்கள் யாவும் மனிதன் தன்னை பண்படுத்துவதற்கும் சமூக இயைபுடையவனாக மாறுவதற்கும் உரிய வழிவகைகளை எடுத்துரைப்பனவாகவே அமைகின்றன. அன்று முதல் இன்று வரை எழுந்த அனைத்து இலக்கிய வகைமைகளும் வெவ்வேறுபாடு பொருளைக் கொண்டிருந்தாலும் அடிநாதமாக இருப்பது சமூகமே ஆகும். அதிலும் குறிப்பிட்ட இனக்குழுச் சார்ந்து அவர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், தொழில், முதலிய பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் நோக்கிலான இலக்கியங்களை பெரும்பான்மையாகக் காண முடிகிறது. வெவ்வெறு காலச்சூழலில் எழுந்த இலக்கியவடிவங்களாக இருந்தாலும் அவை சமூகம் மற்றும் தனி மனித விழுமியத்திற்கு வித்திடுவதாகவே அமைகின்றன. இதனை சங்ககால அகநானூறு காட்டும் பரதவர் சமூகத்தையும், நவீனகால அலைவாய்க் கரையில் நாவல் காட்டும் பரதவர் சமூகத்தையும் ஒப்பீட்டாய்வு செய்வதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. அப்பாதுரை. கா, 1800 ஆண்டுகட்க்கு முற்பட்ட தமிழகம், ராமையா பதிப்பகம், சென்னை, 2006.
2. ஆன்றிஷா. ம., கொ. மா. கோதண்டம் படைப்புகளில் பளியர் இன வரைவியல், தமிழ் மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ், ஜனவரி, 2023.
3. இராஜம்கிருஷ்ணன், அலைவாய்க் கரையில், தாகம் வெளியீடு, சென்னை, 1990.
4. செயபால். இரா, அகநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2007.
5. தமிழண்ணல், தொல்காப்பியம் - பொருளதிகாரம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2010.
6. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016.